ஔம்

# நல்வழி

ஔவையார் இயற்றியது

நேரிசை - அளவுடைவெண்பா

## 0. இறை வணக்கம்

பா லுந் தெளி தே னும் பா கும் பருப் புமி வை
நா லுங் கலந் துனக் கு நான் தரு வேன் - கோ லஞ் செய்
துங் கக் கரி முகத் துத் தூ மணி யே நீ யெனக் குச்
சங் கத் தமிழ் மூன் றுந் தா

## 1. நன்மையே செய்க

புண் ணிய மாம் பா வம் போம் போ னநாட் செய் தவை
மண் ணில் பிறந் தார்க் கு வைத் தபொ ருள் - எண் ணுங் கால்
ஈ தொழி ய வே றில் லை எச் சம யத் தோர் சொல் லும்
தீ தொழி ய நன் மைச் செயல்

## 2. உயர் குலம் இழி குலம்

சா தி யிரண் டொழி ய வே றில் லை சாற் றுங் கால்
நீ தி வழு வா நெறி முறை யின் - மே தினி யில்
இட் டார் பெரி யோர் இடா தார் இழி குலத் தோர்
பட் டாங் கி லுள் ள படி

## 3. ஈகைப் பயன் வீடு பேறு

இடும் பைக் கிடும் பை இய லுடம் பி தென் ற
இடும் பொய் யை மெய் யென் றிரா தே - இடுங் கடு க
உண் டா யி னுண் டா கும் ஊ ழிற் பெரு வலி நோய்
விண் டா ரைக் கொண் டா டும் வீடு

### 4. காலம் அறிந்து செய்க

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | எண் ணி | ஒரு கரு மம் | யார்க் குஞ்ச் செய் | யொண் ணா து |
| | 2 | புண் ணியம் | வந் தெய் தும் | போ தெல் லாற் - | கண் ணில் லான் |
| 2 | 3 | மாங் காய் | விழ வெறிந் த | மாத் திரைக் கோல் | ஒக் குமே |
| | 4 | ஆங் கா ல | மா கு | மவர்க்கு | |

### 5. கவலையடைதல் கூடாது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | வருந் தி | யழைத் தா லும் | வா ரா த | வா ரா |
| | 2 | பொருந் துவ ன | போமி னென் றார் | போ கா - | இருந் தேங் கி |
| 2 | 3 | நெஞ் சம் | புண் ணா க | நெடுந் தூ ரந் | தாம் நினைந் து |
| | 4 | துஞ் சுவ தே | மாந் தர் | தொழில் | |

### 6. பேராசை கூடாது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | உள் ள | தொழி ய | ஒரு வர்க் | கொரு சுக முங் |
| | 2 | கொள் ளக் | கிடை யா | குவ லயத் தில் - | வெள் ளக் |
| 2 | 3 | கட லோ டி | மீண் டு | கரை யே றி | னா லென் |
| | 4 | உட லோ டு | வா ழும் | உயிர்க்கு | |

### 7. ஞானிகள் பற்றற்று இருப்பர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | எல் லாப் | படி யா லும் | எண் ணினா | லிவ் வுடம் பு |
| | 2 | பொல் லாப் | புழு மலி நோய் | புன் குரம் ப - | நல் லார் |
| 2 | 3 | அறிந் திருப் பார் | ஆ தலி னால் | ஆங் கம ல | நீர் போல் |
| | 4 | பிறிந் திருப் பார் | பே சார் | பிறர்க்கு | |

### 8. ஒழுக்கம் பொருளினும் சிறந்தது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | ஈட் டும் | பொருள் முயற் சி | எண் ணிறந் த | வா யினும் |
| | 2 | கூட் டும் | பயன் றிக் | கூ டா வாம் - | தேட் டம் |
| 2 | 3 | மரி யா தைக் | கா ணு | மகி தலத் தீர் | கேண் மின் |
| | 4 | தரி யா து | கா ணுந் | தனம் | |

### 9. குடிப்பிறந்தார் வறுமையிலும் உதவுவர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | ஆற் றுப் | பெருக் கால் | அடி சுடு மந் | நா ளுமவ் வார் |
| | 2 | ஊற் றுப் | பெருக் கால் | உல கூட் டு - | மேற் றவர்க்கு |
| 2 | 3 | நல் ல | குடிப் பிறந் தார் | நல் கூர்ந் தார் | ஆ னா லும் |
| | 4 | இல் லையெ ன | மாட் டார் | இசைந்து | |

## 10. கொடுத்து உண்டு வாழ்க

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | ஆண் டாண் டு | தோ றும் | அழு து | புரண் டா லும் |
| | 2 | மாண் டார் | வரு வரோ | மா நிலத் தீர் - | வேண் டாம் |
| 2 | 3 | நமக் கு | மது வழி யே | நாம் போ | மள வும் |
| | 4 | எமக் கென் னென் | றிட் டுண் | டிரும் | |

## 11. வயிற்றின் கொடுமை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | ஒரு நா | ளுன வையொ ழி | யென் றா | லொழி யாய் |
| | 2 | இரு நாளைக் | கே லென் றா | லே லாய் - | ஒரு நா ளும் |
| 2 | 3 | என் னோடு | வரி யா | யிடும் பைகூ | ரென் வயி றே |
| | 4 | உன் னோடு | வாழ் த | லரிது | |

## 12. ஊழ்வின் உயர்வு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | ஆற் றங் | கரை யின் | மர மு | மர சறி ய |
| | 2 | வீற் றிருந் த | வாழ் வும் | விழு மன் றே - | ஏற் ற |
| 2 | 3 | முழு துண் டு | வாழ் வதற் | கொப் பில் லை | கண் டீர் |
| | 4 | பழு துண் டு | வே றோர் | பணிக்கு | |

## 13. நம்மால் விலக்க இயலாதன

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | ஆ வா ரை | யா ரே | அழிப் ப | ரது வன் றி |
| | 2 | சா வா ரை | யா ரே | தவிர்ப் பவ - | ரோ வா மல் |
| 2 | 3 | அய் யம் | புகு வா ரை | யா ரே | விலக் குவார் |
| | 4 | மெய் யம் | புவி யதன் | மேல் | |

## 14. மானமே உயிரினும் சிறந்தது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | பிச் சைக் கு | மூத் த | குடி வாழ்க் கை | பே சுங் கால் |
| | 2 | இச் சைப ல | சொல் லி | இடித் துண் கை - | சிச் சீ |
| 2 | 3 | வயி று | வளர்க் கைக் கு | மா ன | மழி யாது |
| | 4 | உயிர் விடு கை | சா ல | உறும் | |

## 15. சிவாய நம

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | சிவா ய | நம வென் று | சிந் தித் | திருப் போர்க்கு |
| | 2 | அபா ய | மொரு நா ளு | மில் லை - | உபா ய |
| 2 | 3 | மிது வே | மதி யா கும் | மல் லா த | வெல் லாம் |
| | 4 | விதி யே | மதி யாய் | விடும் | |

**16. வியத்தகு மேன்மை**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | தண் ணீர் | நில நலத் தால் | தக் கோர் | குணங்க் கொடை யால் |
| | 2 | கண் ணீர் மை | மா றாக் | கரு ணையால் - | பெண் ணீர் மை |
| 2 | 3 | கற் பழி யா | வற் றால் | கடல் சூழ்ந் த | வைய கத் துள் |
| | 4 | அற் புத மா | மென் றே | அறி | |

**17. தீவினையே வறுமைக்கு வித்து**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | செய் தீ | வினை யிருக் கத் | தெய் வத் தை | நொந் தக் கால் |
| | 2 | எய் த | வரு மோ | இரு நிதி யம் - | வையத் து |
| 2 | 3 | அறும் பா வ | மென் னவ றிந்த் | தன் றிடார்க் | கின் று |
| | 4 | வெறும் பா னை | பொங் குமோ | மேல் | |

**18. அடிப்பவர்க்கே கொடுப்பர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | பெற் றோர் | பிறந் தார் | பெரு நாட் டார் | பே ருல கில் |
| | 2 | உற் றார் | உகந் தார் | என வேண் டார் - | மற் றோர் |
| 2 | 3 | இர ணங் | கொடுத் தால் | இடு வர் | இடா ரே |
| | 4 | சர ணங் | கொடுத் தா லுந் | தாம் | |

**19. உயர் நோக்கம் இல்லை**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | சே வித் துஞ் | சென் றிரந் துந் | தெண் ணீர்க் | கடல் கடந் தும் |
| | 2 | பா வித் தும் | பா ராண் டும் | பாட் டிசைத் தும் - | போ விப் பம் |
| 2 | 3 | பா ழி | னுடம் பை | வயிற் றின் | கொடு மையால் |
| | 4 | நா ழி | யா ரிசிக் கே | நாம் | |

**20. விலைமகள் தொடர்பு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | அம் மி | துணை யா க | ஆ றிழிந் த | வா றொக் கும் |
| | 2 | கொம் மை | முலை பகர் வார்க் | கொண் டாட் டம் - | இம் மை |
| 2 | 3 | மறு மைக் கும் | நன் றன் று | மா நிதி யம் | போக் கி |
| | 4 | வெறு மைக் கும் | வித் தாய் | விடும் | |

**21. வஞ்சனை யில்லார்க்கு வாழ்வு சிறக்கும்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | நீ ரும் | நில மும் | நிலம் பொதி யும் | நெற் கட் டும் |
| | 2 | பே ரும் | புக ழும் | பெரு வாழ் வும் - | ஊ ரும் |
| 2 | 3 | வருந் திரு வும் | வாழ் நா ளும் | வஞ் சமி லார்க் | கென் றும் |
| | 4 | தருஞ் சிவந் த | தா மரை யாள் | தான் | |

**22. புதைத்த பணத்தால் யாருக்குப் பயன்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | பா டுபட் டுத் | தே டிப் பணத் தைப் | புதைத் து | வைத் துக் |
| | 2 | கே டுகெட் ட | மா னிட ரே | கே ளுங் கள் - | கூ டுவிட் டிங் |
| 2 | 3 | ஆ விதான் | போ யின பின் | யா ரே | அனு பவிப் பர் |
| | 4 | பா விகா | ளந் தப் | பணம் | |

**23. வழக்கில் ஓரம் சொன்னவர் மனை பாழ்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | வே தா ளம் | சே ருமே | வெள் ளெருக் குப் | பூக் குமே |
| | 2 | பா தா ள | மூ லி | பட ருமே - | மூ தே வி |
| 2 | 3 | சென் றிருந் து | வாழ் வா ளே | சே டன் | குடி புகு மே |
| | 4 | மன் றோ றஞ் | சொன் னார் | மனை | |

**24. வாழ்க்கை மாண்பு ஐந்து**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | நீ றில் லா | நெற் றிபாழ் | நெய் யில் லா | உண் டிபாழ் |
| | 2 | ஆ றில் லா | ஊ ருக்கு | அழ குபாழ் - | பா ரில் |
| 2 | 3 | உடன் பிறப் | பில் லா | வுடம் புபாழ் | பா ழே |
| | 4 | மடக் கொடி | யில் லா | மனை | |

**25. வரவுக் கேற்ற செலவு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | ஆ ன | முத லில் | அதி கஞ் | செல வா னால் |
| | 2 | மா ன | மழிந் து | மதி கெட் டுப் - | போ னதி சை |
| 2 | 3 | எல் லோர்க் கும் | கள் ளனா | ஏழ் பிறப் புந் | தீ யனாய் |
| | 4 | நல் லார்க் கும் | பொல் லனாம் | நாடு | |

**26. பசி வந்திடப் பத்தும் போகும்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | மா னங் | குலங் கல் வி | வண் மை | அறி வுடை மை |
| | 2 | தா னந் | தவ முயர்ச் சி | தா ளாண் மை - | தே னின் |
| 2 | 3 | கசி வந் த | சொல் லியர் மேர் | கா முறு தல் | பத் தும் |
| | 4 | பசி வந் | திடப் பறந் து | போம் | |

**27. எல்லாம் இறைவன் செயல்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | ஒன் றை | நினை க்கின் | அது வொழிந் திட் | டொன் றா கும் |
| | 2 | அன் றி | அது வரி னும் | வந் தெய் து - | ஒன் றை |
| 2 | 3 | நினை யாத | முன் வந் து | நிற் பினும் | நிற் கும் |
| | 4 | எனை யா ளும் | ஈ சன் | செயல் | |

**28. மனவமைதி வேண்டும்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | உண் பது | நா ழி | உடுப் பது | நான் குமு ழம் |
| | 2 | எண் பது | கோ டிநி னைந்து | எண் ணுவ ன - | கண் புதைந் த |
| 2 | 3 | மாந் தர் | குடி வாழ்க் கை | மண் ணின் | கலம் போ லச் |
| | 4 | சாந் துணை யும் | சஞ் சல மே | தான் | |

**29. கொடையாளருக்கு எல்லோரும் உறவினர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | மரம் பழுத் தால் | வௌவா லை | வா வென் று | கூ வி |
| | 2 | இரந் தழைப் பார் | யா வரு மிங் | கில் லை - | சுரந் தமு தம் |
| 2 | 3 | கற் றார் | தரல் போல் | கர வா | தளிப் பறேல் |
| | 4 | உற் றார் | உல கத் | தவர் | |

**30. விதியின் தன்மை**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | தாந் தா முன் | செய் தவி னை | தா மே | அனு பவிப் பர் |
| | 2 | பூந் தா | மரை யோன் | பொறி வழி யே - | வேந் தே |
| 2 | 3 | ஒறுத் தா ரை | என் செய லாம் | ஊ ரெல் லாம் | ஒன் றா |
| | 4 | வெறுத் தா லும் | போ மே | விதி | |

**31. இதனினும் இதுநன்று**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | இழுக் குடை ய | பாட் டிற்கு | இசை நன் று | சா லும் |
| | 2 | ஒழுக் கம் | உயர் குலத் தின் | நன் று - | வழுக் குடை ய |
| 2 | 3 | வீ ரத் தின் | நன் று | விடா நோய் | பழிக் கஞ் சாத் |
| | 4 | தா ரத் தின் | நன் று | தனி | |

**32. பொருள் இருக்கும் போதே அறம் செய்க**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | ஆ றிடும் | மே டும் | மடு வும் போ | லாஞ் செல் வம் |
| | 2 | மா றிடும் | மே றிடும் | மா நிலத் தீர் - | சோ றிடும் |
| 2 | 3 | தண் ணீ ரும் | வா ரும் | தரு மமே | சார் பா க |
| | 4 | உண் ணீர் மை | வீ றும் | உயர்ந்து | |

**33. வன்சொல்லும் இன்சொல்லும்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | வெட் டென வை | மெத் தென வை | வெல் லா வாம் | வே ழத் தில் |
| | 2 | பட் டுரு வுங் | கோல் பஞ் சிற் | பா யா து - | நெட் டிருப் புப் |
| 2 | 3 | பா றைக் கு | நெக் குவி டாப் | பா றை | பசு மரத் தின் |
| | 4 | வே ருக் கு | நேக் கு | விடும் | |

### 34. பொருளில்லாருக்கு இவ்வுலகம் இல்லை

| | | | |
|---|---|---|---|
| கல் லா னே | யா னா லுங் | கைப் பொரு ளொன் | றுண் டா யின் |
| எல் லா ரும் | சென் றங் | கெதிர் கொள் வ - | இல் லா னை |
| இல் லா ளும் | வேண் டாள் மற் | றீன் றெடுத் த | தாய் வேண் டாள் |
| செல் லா | தவன் வா யிற் | சொல் | |

### 35. அறிவுடையோரும் பேதையும்

| | | | |
|---|---|---|---|
| பூ வா தே | காய்க் கும் | மர முமு ள | மக் களுள் |
| மே வா தே | நின் றுணர் வார் | தா முள ரே - | தூ வா |
| விரைத் தா லும் | நன் றா கா | வித் தென வே | பே தைக் |
| குரைத் தா லும் | தோன் றா | துணர்வு | |

### 36. பிறன்மனை விரும்பாமை

| | | | |
|---|---|---|---|
| நண் டுசிப் பி | வேய் கத லி | நா சமு றுங் | கா லத் தில் |
| கொண் டக் | கரு வளிக் குங் | கொள் கை போ - | லொண் டொடி |
| போ தந் | தனங் கல் வி | பொன் றவ ருங் | கா லம யல் |
| மா தர் மேல் | வைப் பார் | மனம் | |

### 37. வீடு அடைதல்

| | | | |
|---|---|---|---|
| வினைப் பய னை | வெல் வதற் கு | வே தம் | முத லா |
| மனைத் தா ய | நூ லகத் து | மில் லை - | நினைப் பதெ னக் |
| கண் ணுறு வ | தல் லார் | கவ லைப் படேல் | நெஞ் சே மெய் |
| விண் ணுறு வார்க் | கில் லை | விதி | |

### 38. உண்மை நிலை

| | | | |
|---|---|---|---|
| நன் றேன் றும் | தீ தென் றும் | நா னென் றும் | தா னென் றும் |
| மன் றென் றும் | மா மென் று | மா கா தே - | நின் றநி லை |
| தா னதாந் | தத் துவ மாம் | சம் பறுத் தார் | யாக் கைக் குப் |
| போ னவா | தே டும் | பொருள் | |

### 39. முப்பதில் முதல்வனை அறி

| | | | |
|---|---|---|---|
| முப் பதா | மாண் டள வில் | மூன் றற் | றொரு பொரு ளைத் |
| தப் பா மல் | தன் னுட் | பெறா னா யின் - | செப் புங் |
| கலை யள வே | ஆ குமாம் | கா ரிகை யார் | தங் கள் |
| முலை யள வே | ஆ குமாம் | மூப்பு | |

### 40. சிறந்த நூல்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | தே வர் | குற ளும் | திரு நான் | மறை முடி வும் |
| | 2 | மூ வர் | தமி ழும் | முனி மொழி யும் - | கோ வை |
| 2 | 3 | திரு வா | சக மும் | திரு மூ லர் | சொல் லும் |
| | 4 | ஒரு வா | சக மென் | றுணர் | |

முற்றும்

---

## நூல் குறிப்பு:

மக்கள் அறச் சிந்தனையோடு வாழ வேண்டி எழுதப்பட்ட நூல். இது வெண்பாவில் **நேரிசை அளவுடை வெண்பா** என்னும் வகையைச் சேர்ந்தது. இது இறைவணக்கம் ஒரு பாடலும், நூலில் நாற்பது பாடலும் கொண்ட **நாற்பது** என்ற சிற்றிலக்கிய வகையைச் சேர்ந்தது. மொத்தம் நாற்பத்தியொரு பாடல் கொண்டது.

---

## எமது தமிழாய்வு:

இப்பாடல் ஒவ்வொன்றும் மொத்தம் 4 அடிகளைக் கொண்டது அவற்றை இரண்டிரண்டு அடிகளாக பிரிக்க, ஒரு பாடலுக்கு மொத்தம் 2 கண்ணிகள். இவற்றின் ஓசை செப்பலோசை ஆகும். மேலும் செப்பலோசையில் இது ஒழுகிசைச் செப்பலோசையாகும்.

மனனம் செய்வதற்கு எற்றவகையில் எதுகை மோனை இயைபுத் தொடைகளை வண்ணங்களில் காட்டியிருக்கிறோம். மேலும் கண்ணி மற்றும் அடி போன்றவற்றை எண்ணிக்கைகளில் காட்டியிருக்கின்றோம். இன்றைய காலங்களில் செய்யுள்களை சொல்தனிநிலை செய்து பதிப்பிக்கிறார்கள், இது தவறான முறையாகும். செய்யுள்களை வகையுளி செய்யப்பட்ட விதத்திலேயே காண்பிக்க வேண்டும். அதனால் இங்கே அடிக்கு நான்குசீர் என்ற அடிப்படையிலேயே காட்டியிருக்கிறோம். சீரை அசைபிரித்தும் காட்டியிருக்கிறோம். யாப்பிலக்கணம் தெரிந்தவர்கள் இந்த நுட்பங்களைக் கண்டு மகிழ்வர்.

## ஆசிரியர்குறிப்பு:



ஔவையார் என்பவர் சங்ககாலத்தைச் சேர்ந்த ஒரு பெண்பாற் புலவர் ஆவார். அவர் குழந்தைப்பருவம் முதலே, விநாயகர்மீதும், தமிழின்மீதும், மாளாத பற்றுகொண்டவராக இருந்தார். அவர் தனது இளமைப்பருவத்தை எய்தியவுடன், அவருக்கு திருமணம் முடித்துவைக்க பெற்றோர் ஏற்பாடு செய்தனர். இல்லற வாழ்வில் நாட்டம் இல்லாத ஔவை. துறவர வாழ்க்கையை மேற்கொண்டால்தான் தமிழ்த்தொண்டாற்றி இறைவனை அடையமுடியும் என்றெண்ணி தன்விருப்பத்தை பெற்றொரிடம் தெரிவித்தார். ஆனால் அவர்கள் அதற்கு சம்மதிக்கவில்லை, இதனால் மனமுடைந்த ஔவை தன்வீட்டுக் கொல்லையில் உள்ள விநாயகர் திருவுருவச்சிலையை சரணடைந்தார். பிறகு விநாயகர், அவரை ஆட்கொண்டு, அவருக்கு துறவு கோலத்துடன் கூடிய முதுமைத்தோற்றத்தை அளித்து, தமிழில் நூல் பலபடைத்து அதன்வழி அறவாழ்வையும் வீடுபேரு அடையும் மெய்யறிவு கலையையும் மக்களுக்கு எடுத்துரைத்து. தமிழுக்கும் இறைவனுக்கும் தொண்டாற்றி பிறகு சிவபதவியடைய தவம் மேற்கொள்ளுமாறும் அறிவுருத்தினார். அவ்வழிக்குதாமே வந்து அழைத்துச்செல்வோம் என்றும் கூறி மறைந்தார். அதன்படிக்கு விநாயகரை முதன்மைக் கடவுளாக வைத்து நூல் பலபடைத்தார். அவற்றில் "**நல்வழி**" என்ற இந்த அறம் மற்றும் நீதி நூலும் அடக்கம்.

---

நெறியோடுஆய்வு செய்து வெளியிடுவோர்


**இரா. மகேந்திரவர்மன்**

**தமிழாராய்ச்சியாளர்**

+91 9677253304

rmagendravarman@gmail.com



www.muththamizhneri.com

(முத்தமிழ்நெறி.காம்)

-Powered by Lifo Technologies

- இணையவழி ஆய்வுக்கூடம்
- இணையவழி வெளியீட்டகம்
- இணையவழி ஊடகம்
- இணையவழி பயிலகம்
- இணையவழி சங்கம்